## வெற்றிக்குச் சூளுரைக்கும் 'வார் ரூம் செயலி'

# மக்களுடன் ஸ்டாலின் - "வார் ரூம் செயலி" அறிமுகம் மற்றும் BDAகள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைக்கும் வகையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே மக்களோடு மக்களாக இருந்து களப்பணியாற்றி வருகிறது கழகம்.

மாண்புமிகு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் வழிகாட்டலின் பேரில் பல்வேறு உத்திகளை செயல்படுத்தி சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டு வருகிறது கழகம். அந்த வகையில் தேர்தல் நாளான ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குச்சாவடி முதல், தலைமைக்கழகம் வரை ஒருங்கிணைக்கும் வகையில், மக்களுடன் ஸ்டாலின் 'வார் ரூம்' செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்த செயலி மூலம் தேர்தல் நாளின் போது அனைத்து வாக்குச்சாவடிகளும் ஒருங்கிணைந்து செயல்படவும், ஒவ்வொரு வாக்குச்சாவடியின் களநிலவரத்தையும் நேரடியாக தலைமைக் கழகம் மூலம் கண்காணிக்கும் வகையிலும் பயன்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 75,032 வாக்குச்சாவடிகளிலும் தேர்தல் நாளில் வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் எவ்வளவு வாக்குகள் பதிவாகி உள்ளன என்ற தகவல், வாக்குச்சாவடியில் எழும் புகார்கள் மற்றும் தேர்தல் நிறைவடைந்த பிறகு 17சி படிவத்தை டிஜிட்டல்படுத்துதல் என தேர்தல் நடைமுறைகளின் துல்லியத்தை உறுதி செய்யும் பணிகளை கழக தகவல் தொழில்நுட்ப அணியின் பூத் டிஜிட்டல் ஏஜென்டுகள் (BDA) மேற்கொள்ள உள்ளனர்.

இந்த பணிகளை மேற்கொள்ள மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் தங்கள் பொறுப்புக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் ஏற்கனவே உள்ள பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளை(BDA) உடனடியாக இப்பணிக்கு நியமிக்க வேண்டும்.

ஐந்துக்கும் குறைவான வாக்குச்சாவடிகளைக் கொண்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு குறைந்தபட்சம் ஒருவர் எனவும், ஐந்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளைக் கொண்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு சராசரியாக 5 பாகத்திற்கு ஒரு BDA வீதம் நியமிக்க வேண்டும். ஏற்கனவே உள்ள பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளாக (BDA) தேவைக் கேற்ப தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும். வார்ரூம்செயலிபணிக்குநியமிக்கப்படும் பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளுக்கு (BDA) தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் வார் ரூம் செயலியை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கான பயிற்சி வழங்கப்படும்.

பூத் டிஜிட்டல் ஏஜென்டுகள் (BDA) மேற்கொள்ள இருக்கும் மேற்சொன்ன பணிகளை, அந்தந்த வாக்குச்சாவடிக்குப் பொறுப்பு வகிக்கும் மாவட்ட கழக செயலாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வழக்கறிஞர் அணி சார்பில் நியமிக்கப் பட்டுள்ள தொகுதி பொறுப்பாளர், தொகுதி மற்றும் வாக்குச்சாவடி அளவிலான நிர்வாகிகள் கண்காணிப்பது அவசியம்.

மக்களுடன் ஸ்டாலின் வார் ரூம் செயலி மூலம் தேர்தல் நாளின் போது உடனுக்குடன் பெறப்படும் தகவல்கள், புள்ளிவிவரங்கள் நமது கழக வெற்றியை உறுதி செய்வதற்குத் துணை நிற்கும்.

மக்களுடன் ஸ்டாலின் 'வார் ரூம்' செயலியைப் பயன்படுத்த பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளை (BDA) நியமிப்பது, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட ஆயத்தப் பணிகள் முழுமையாக நடைபெறுவதை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**
**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை18.**
**நாள் : 13-4-2026.**



இராணிப்பேட்டை சீனிவாசன் பேட்டையில் சட்டமேதைஅண்ணல் அம்பேத்கர் அவர்களின் 136 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரின் திருவுருவச் சிலைக்கு இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் வி.சி.க. மாவட்டச் செயலாளர் ரமேஷ் கர்ணா மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், நகர துணை செயலாளர்கள் வையாபுரி ஏர்டெல் குமார் எம். கிருஷ்ணன், நகர மாணவரணி அமைப்பாளர் பாலாஜி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றியபெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ஆகியோர் உள்ளனர்.

# களத்தில் இளைஞர் அணி

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.



திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் மத்திய மாவட்டம்



பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



பழனி சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி,
தேனி வடக்கு மாவட்டம்



ஓமலூர் சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.



திருவரங்கம் சட்டமன்றத் தொகுதி,
திருச்சி மத்திய மாவட்டம்.



ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி,
சென்னை வடகிழக்கு மாவட்டம்